**<u>மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்</u>**

**<u>கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்</u>**

<u>முன்னிலை : திரு. இரா. முத்துக்குமாரசாமி</u>

**ந.க.எண்.66888/அந1/2/2016-1** **நாள். 05.12.2022**

பொருள்: அலுவலக நடைமுறை – திரு. N.கோபிநாத், தட்டச்சர் –தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV – போட்டித் தேர்வு 2013–2014&2014–2015 மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் இணைந்த தட்டச்சர்– பணிவரன் முறை செய்தது – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித ந.க. எண். 992/PSD- A1/2016, நாள்: 06.09.2016
2. இவ்வியக்கக பணி நியமன ஆணை எண். 8575/நிபி2/2/2014-6 நாள்:21.10.2016
3. இவ்வியக்கக பணி நியமன ஆணை எண். 66888/அந1/2/2016 நாள்:01.11.2016
4. இவ்வியக்கக ஆணை எண். 66888/அந1/2/2016–2, நாள்: .08.2022

********

**<u>ஆணை:</u>**

பார்வை 1ல் காணும் கடிதம் வழி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. N.கோபிநாத், தட்டச்சர் பார்வை 2ல் காணும் இவ்வியக்கக ஆணைகளின்படி பணி நியமனம் மற்றும் பணியிட அமர்வு ஆணை வழங்கப்பட்டது. அதன்படி திரு. N.கோபிநாத், தட்டச்சர் 07.11.2016 முப அன்று பணியில் இணைந்துள்ளார். மேற்குறிப்பிட்டுள்ள தட்டச்சர் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் பொது விதி 10(a) (i)ன்படி பணிநியமனம் பெற்று முறையே இவ்வலுவலகப் பணியில் தட்டச்சராக பணியில் இணைந்துள்ளார்.

எனவே திரு. N.கோபிநாத் பணியில் இணைந்த நாள் 07.11.2016 முதல் அவரது பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. அவரது பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டு பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டு பணிக்காலம் முடிக்கும் வகையில் அவர் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுகிகிறார்.

மேற்குறிப்பிட்டுள்ள தட்டச்சர் தகுதி காண் பருவ காலத்தில் கணிணியில் அலுவலக இயக்குமுறை (Computer on Office Automation) மற்றும் மருத்துவ விதி தொகுப்பு (Medical Code) தேர்வில் தேர்ச்சி பெற்றால் தான் தகுதி காண் பருவம் பூர்த்தி செய்த ஆணை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குறிப்பிட்டுள்ள தட்டச்சரின் தற்காலிகப் பணி அவர் தட்டச்சராக அரசுப்பணியில் இணைந்துள்ள நாள் முதல், 2013-2014&2014-2015வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பட்ட தொகுதி - 4 தேர்வு நியமனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள நீதி பேராணையின் மீது நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் முடிவிற்கு உட்பட்டு, பணிவரன்முறை செய்யப்படுகிறது.

மேற்கண்ட பணிவரன்முறை ஆணை, சம்மந்தப்பட்ட தட்டச்சரின் பணிபதிவேட்டில் பதியப்படுகிறது.

இரா. முத்துக்குமாரசாமி
கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர்
திரு. N.கோபிநாத், தட்டச்சர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை - 6

நகல்
நிர்வாகப் பிரிவு 2 / பணப்பிரிவு (2 நகல்கள்) / பணிப்பதிவேடு
இருப்புக்கோப்பு / உதிரி.

// உண்மை நகல் / அனுப்பப்படுகிறது //

8/12/22

நிர்வாக அலுவலர்

8/12/22 8/12/22